


**28. 12. 2025**

## தலைப்புச் செய்திகள்

1. பாதுகாப்பு, அறிவியல், விளையாட்டு உள்ளிட்ட துறைகளில் நாடு அளப்பரிய சாதனைகளை படைத்துள்ளதாக, பிரதமர் திரு நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் மருத்துவத்துறையில் இந்திய மருத்துவ சங்கம் சிறந்த பங்காற்றி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமீத்ஷா தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில், நலம் காக்கும் மருத்துவ முகாம்கள் மூலம், இதுவரை 13 லட்சம் பேர் பயனடைந்துள்ளதாக, முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

4. தமிழ்நாட்டில் இன்று நடைபெறும் வாக்காளர் பட்டியல் திருத்த முகாமில் ஏராளமான வாக்காளர்கள் விண்ணப்பித்து வருகின்றனர்.

5. இந்திய இலங்கை மகளிர் அணிகளுக்கிடையேயான 4ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி திருவனந்தபுரத்தில் இன்றிரவு நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

மன் கி பாத்

தேச பாதுகாப்பு, அறிவியல், விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நாடு இந்த ஆண்டு அளப்பரிய சாதனைகளை படைத்துள்ளதாக, பிரதமர் திரு நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் - மனதின் குரல் நிகழ்ச்சியில், 129-வது முறையாக இன்று உரையாற்றிய அவர், நாடு தனது பாதுகாப்பில் சமரசம் செய்துகொள்வதில்லை என்பதற்கு ஆபரேஷன் சிந்தூர் மிக சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்றார்.

வந்தேமாதரம் பாடலின் 150-வது ஆண்டு கொண்டாட்டங்களில் மக்கள் தங்களது உணர்வையும் உற்சாகத்தையும் வெளிப்படுத்தியது மகிழ்ச்சி அளிப்பதாக கூறினார்.

இந்திய விளையாட்டு வீர வீராங்கனைகள் ஐ சி சி சாம்பியன் கோப்பை, மகளிர் உலக கோப்பை, பார்வையற்றோருக்கான 20 - 20 மகளிர் உலக கோப்பை உள்ளிட்டவற்றை வென்று சாதனைகளை படைத்துள்ளதாக தெரிவித்தார்.

அறிவியல் மற்றும் விண்வெளி துறையில் புதிய அத்தியாயம் படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பிரதமர், குரூப் கேப்டன் சுபான்சுசுக்லா, சர்வதேச விண்வெளி நிலையத்தை அடைந்த முதல் இந்தியர் என்ற சாதனையை படைத்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பிற்கான பல்வேறு முன் முயற்சிகளும் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்த பிரதமர், நாட்டில் தற்போது சிறுத்தைகளின் எண்ணிக்கை 30-க்கும் அதிகமாக உள்ளதாக, கூறினார்.

நாட்டின் கலாச்சாரம், பாரம்பரியம் உள்ளிட்டவை ஒன்றிணைக்கப்பட்டு, பிரயாக்ராஜில் மஹா கும்பமேளா இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்றது, உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தியதாக கூறிய பிரதமர், அண்மையில் அயோத்தியில் நடைபெற்ற ராமர் கோவில் கொடியேற்று விழா ஒவ்வொரு இந்தியரையும் பெருமை அடைய செய்ததாக கூறினார்.

சுதேசி பொருட்கள் மீதான மக்களின் ஆர்வம் தற்போது அதிகரித்துள்ளதாக, மகிழ்ச்சி வெளியிட்டார்.

நாட்டின் வளர்ச்சிக்கு இளையோர் சக்தியின் அவசியத்தை எடுத்துரைத்த பிரதமர், சுவாமி விவேகானந்தரின் பிறந்ததினம், தேசிய இளைஞர் தினமாக அடுத்தமாதம் 12-ம்தேதி கொண்டாடப்பட உள்ளதாக கூறினார்.

அன்றைய தினம், வளர்ச்சியடைந்த பாரத இளம் தலைவர்கள் உரையாடல் நிகழ்ச்சியின் இரண்டாவது அமர்வு நடைபெறும் என்றும்தெரிவித்தார்.

ஸ்மார்ட் இந்தியா - ஹேக்கத்தான் நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணாக்கர், அரசுத்துறைகளின் 270-க்கும் மேற்பட்ட சவால்களுக்கு தீர்வுகாணும் வகையில் பணியாற்றியதாக கூறிய பிரதமர், இந்நிகழ்ச்சியில், மாணாக்கர், நிதி மோசடிகள்,

டிஜிட்டல் கைது உள்ளிட்ட சவால்களுக்கான தங்களது யோசனைகளை எடுத்துரைத்ததாக தெரிவித்தார்.

பிரதமரின் சூரியசக்தி திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்கு 80 ஆயிரம் ரூபாய் வரை அரசு மானியம் வழங்கிவருவதாக பிரதமர் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற காசி – தமிழ்ச்சங்கமம் நிகழ்ச்சியின் ஒருபகுதியாக, தமிழ் கற்போம் – தமிழ் கற்கலாம் என்ற கருப்பொருளில் வாரணாசியில் உள்ள 50-க்கும் மேற்பட்ட பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்பட்டதாக கூறினார்.

நாட்டின் 77-வது குடியரசு தினம் கொண்டாடப்பட உள்ள நிலையில், சுதந்திர போராட்ட வீரர்கள் மற்றும் அரசியல் அமைப்பு சட்டத்தை உருவாக்கியவர்களை நினைவுகூர்வதாக தெரிவித்த பிரதமர், அறியப்படாத சுதந்திர போராட்ட தியாகிகள் குறித்து, அரசின் பிரத்யேக வலைதளத்தை பொதுமக்கள் பார்வையிட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

நுண்ணுயிர் எதிர்ப்பிகளால், வைரல் நிமோனியா உள்ளிட்ட தொற்றுநோய்களை கட்டுக்குள் கொண்டுவர இயலவில்லை என இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் அண்மையில் கவலை தெரிவித்ததை சுட்டிக்காட்டிய பிரதமர், பொதுமக்கள் மருத்துவரின் ஆலோசனையின்படி, நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உட்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த பிரதமர், ஃபிட் இந்தியா இயக்கத்தில் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றார்.

புதிய நம்பிக்கைகள், மற்றும் புதிய தீர்மானங்களுடன் எதிர்வரும் புத்தாண்டில் நாடு முன்னேறிச்செல்ல தயாராக இருப்பதாக கூறிய பிரதமர், வளர்சசியடைந்த பாரதம் இலக்கை நோக்கிய பயணத்தில், 2026-ம் ஆண்டு ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

……… . MUSIC… …

வளர்ச்சியடைந்த பாரத பாதையில், 2025-ம் ஆண்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டுடன் சீர்திருத்தங்களின் ஆண்டாக சாதனை படைத்துள்ளது.

……… . MUSIC… … .

கட்டமைப்பு துறையில் ரயில், சாலை, விமானப் போக்குவரத்து, கடல்சார் டிஜிட்டல் என அனைத்து துறைகளிலும் பெரும் மாற்றங்களுடன் ஆக்கப்பூர்வமான வளர்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

2025-26 ஆம் ஆண்டில் கட்டமைப்பு துறைக்கு பதினொரு லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக மத்திய அரசு முதலீடுகளை செய்துள்ளது.

இதன்படி, ரயில்வே துறையில் பல்வேறு வரலாற்று சிறப்பு மிக்க சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

2025ஆம் ஆண்டில் நாட்டின் முதல் செங்குத்துத் தூக்கு கடல் பாலம் பாம்பனில் உருவாக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டது. இது பொறியியல் துறையின் அழியாச்சின்னமாக திகழ்வதுடன், நாட்டின் உள்கட்டமைப்புப் பயணத்தில் ஒரு வரலாற்று மைல்கல்லாக விளங்குகிறது.

பாம்பன் பாலத்தின் சிறப்பு குறித்து திருச்சியை சேர்ந்த கட்டடவியல் பொறியாளர் திரு.லோகநாதன் எமது செய்திப்பிரிவிடம் தெரிவிக்கையில்,

……… . வாய்ஸ் ……

நாட்டின் மெட்ரோ ரயில் கட்டமைப்பு ஆயிரம் கிலோமீட்ட ருக்கும் மேலாக வளர்ந்து, உலகின் மூன்றாவது பெரிய மெட்ரோ அமைப்பாக உருவெடுத்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்களின் எண்ணிக்கை தற்போது 163-ஆக அதிகரித்துள்ள நிலையில், உலகின் மூன்றாவது பெரிய உள்நாட்டு விமானப் போக்கு வரத்து சந்தையாக இந்தியா விளங்குகிறது.

தேசிய நெடுஞ்சாலைகள் ஒரு லட்சத்து 46 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிலோ மீட்டராக கட்டமைப்ப்பட்டுள்ள நிலையில் பொருளாதார வளர்ச்சி மற்றும் தேசிய ஒருமைபாட்டிற்கான இன்றியமையா உந்துசக்தியாக உள்கட்டமைப்பு வலுவடைந்துள்ளது.

……… . MUSIC…… .

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று கர்நாடக மாநிலத்தின் கார்வார் கடற்படை தளத்தில் நீர் மூழ்கி கப்பலில் பயணம் மேற்கொண்டார்.

ஐ.என்.எஸ். வாகஷீர் கல்வாரி வகை நீர்மூழ்கி கப்பலில் கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே. திரிபாதியும், குடியரசுத் தலைவருடன் இணைந்து பயணம் செய்தார்.

கடந்த 2006-ம் ஆண்டு விசாகப்பட்டிணத்தில் நீர்மூழ்கி கப்பலில் பயணித்த அப்போதைய குடியரசுத்தலைவர் ஏ.பி.ஜே அப்துல் கலாமிற்கு பிறகு, நீர்மூழ்கி கப்பல் பயணம் மேற்கொள்ளும் இரண்டாவது குடியரசுத்தலைவர் திரு.திரௌபதி முர்மு என்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖

அமீத்ஷா

இந்திய மருத்துவ சங்கம், மருத்துவத்துறையில் மிகச்சிறந்த பங்காற்றி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமீத்ஷா தெரிவித்துள்ளார்.

அஹமதாபாத்தில் தேசிய அளவிலான மருத்துவ மாநாட்டை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் மூலம், அனைவருக்கும் மலிவு விலையில், மருத்துவ சேவைகள் வழங்கப்படுவதாக கூறினார்.

கோவிட் பெருந்தொற்று காலத்தில், மருத்துவர்கள் நோயாளிகளுக்கு முன்னுரிமை அளித்து சேவையாற்றியதை திரு.அமீத்ஷா நினைவுகூர்ந்தார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தில், நலம் காக்கும் மருத்துவ முகாம்கள் மூலம், இதுவரை 13 லட்சம் பேர் பயனடைந்துள்ளதாக, முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள செய்தியில், சிறப்பு மருத்துவர்களின் ஆலோசனையால், பல லட்சம் மக்களின் உடல்சார்ந்த பிரச்சினைகள் தொடக்க நிலையிலேயே கண்டறியப்பட்டு, தேவை ஏற்படுவோருக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ மருத்துவ காப்பீடு திட்டத்தின்கீழ், உயர்தர சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்-2

கோவை மாநகர் ஆற்றுப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு வரை அமைக்கப்பட்டுள்ள உயர்மட்ட மேம்பாலத்திற்கு சுதந்திர போராட்ட வீரரும், முன்னாள் மத்திய அமைச்சருமான சி சுப்பிரமணியம் பெயர் சூட்டப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தியில் நாட்டில் பசுமை புரட்சிக்கு வித்திட்டவர் பாரத ரத்னா சி.சுப்பிரமணியம் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

வாக்காளர் முகாம்

தமிழ்நாட்டில் இன்று நடைபெறும் வாக்காளர் பட்டியல் திருத்த முகாமில் ஏராளமான வாக்காளர்கள் பங்கேற்று விண்ணப்பித்து வருகின்றனர்.

மாநிலத்தின் 75 ஆயிரம் மையங்களில் நடைபெறும் இம்முகாமில், வாக்காளர்கள் பெயர் சேர்த்தல், நீக்கம், முகவரி

மாற்றம், உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்தகைய முகாம்கள் அடுத்த மாதம் 3, மற்றும் 4-ம் தேதிகளில் நடைபெற உள்ளது.

❖❖❖❖❖❖❖❖

விஜய்காந்த்

தே மு தி க நிறுவனர் விஜய்காந்தின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய தகவல் ஒளிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், பத்மபூஷன் விஜயகாந்தின் சமுதாய பணிகள், அனைவராலும் என்றென்றும் நினைவுகூறப்படுவதாக கூறினார்.

முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில், தமது உயர்ந்த உள்ளத்தால் தமிழ் மக்களின் அன்பை பெற்றவர் விஜயகாந்த் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

இருவரி

பெரம்பலூர் மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நாளை முதல் மூன்று நாட்கள் நடைபெறும் என்று ஆட்சித் தலைவர் திருமதி மிருணாளினி தெரிவித்துள்ளார்

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்திய இலங்கை மகளிர் அணிகளுக்கிடையேயான 4ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி திருவனந்தபுரத்தில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரை இந்தியா 3-0 என்ற கணக்கில் ஏற்கனவே கைப்பற்றியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖